[redacted]



# தமிழ்மொழி

## தொடக்கநிலை 6

# மதிப்பீட்டுத் திட்டம்

## 2017

## சீடார் தொடக்கப்பள்ளி

# மொழிக்கூறுகள்

1.கேட்டல் - 20 மதிப்பெண்கள்

2.பேசுதல் - 30 மதிப்பெண்கள்

3.வாசித்தல்- 20 மதிப்பெண்கள்

4.எழுதுதல் - 130 மதிப்பெண்கள்



# கேட்டல்

- குறும்பனுவல்
- படங்கள்
- எதிருரை வினாக்கள்



## <u>பனுவல் 1</u>

**நீங்கள் பின்வரும் பனுவல் 1-க் கவனமாகக் கேட்டு வினா 1-க்கு விடையளிக்கவும்.**

வணக்கம் நேயர்களே! இது காவல்துறையினரின் பாதுகாப்பு அறிவிப்பு. சிங்கப்பூரிலுள்ள கடைத்தொகுகளில் இப்போது மாபெரும் மலிவு விற்பனை நடந்துகொண்டிருக்கிறது. அதனால், அங்குக் கூட்டம் அதிகமாக இருக்கிறது. கூட்ட நெரிசலில் உங்கள் உடைமைகள் காணாமல் போவதைத் தவிர்க்க எப்போதும் கவனமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் பணப்பை , கைபேசி போன்றவற்றைப் பாதுகாப்பான முறையில் வைத்துக்கொள்ளுங்கள்.

**வினா1.** காவல்துறையினர் பொது மக்களை ஏன் கவனமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றனர் ?

(1) மாபெரும் மலிவு விற்பனை நடைபெறுவதை ஊக்கப்படுத்த

(2) பொது இடங்களில் கூட்ட நெரிசலைக் குறைக்க

(3) மக்களின் உடைமைகள் திருடப்படுவதைத் தடுக்க

## பனுவல் 5

**நீங்கள் பின்வரும் உரையாடலைக் கவனமாகக் கேட்டு வினா 6-க்கு விடையளிக்கவும்.**

**அண்டைவீட்டுக்காரர் :** வணக்கம் மாலா. நலமா இருக்கியாம்மா?

**மாலா :** வணக்கம் ஐயா. நான் நலமா இருக்குறேன். நீங்க?

**அண்டைவீட்டுக்காரர் :** நானும் நலமா இருக்குறேன். அண்டை வீட்டுலெ வசிக்கிறோம். ஆனா நாம அடிக்கடி சந்திக்க முடியலையே!

**மாலா :** ஆமாம் ஐயா. நான் காலையிலேயே பள்ளிக்குப் போயிடுறேன். மாலையிலேதான் வீட்டுக்கு வர்றேன். ஆதனாலதான் உங்களை அடிக்கடிப் பாக்க முடியலே.

**அண்டைவீட்டுக்காரர்:** உடல் நலமில்லாம இருக்கிற என் தாயாரைப் பார்த்துட்டு வர இன்னைக்கு நாங்க எல்லாரும் கோலாலம்பூருக்குப் புறப்படுறோம். திரும்பி வர நாலு நாள்கள் ஆகும். அதுவரை , எங்க வீட்டுக்கு வெளியே இருக்குற செடிகளுக்குத் தினமும் கொஞ்சம் தண்ணீர் ஊற்ற முடியுமா?

**மாலா :** ..............................................................................

**வினா 6.** மாலாவின் பதில் என்னவாக இருக்கும் ?

(1) எனக்கு நேரம் கிடைத்தால் செய்கிறேன்.

(2) நீங்கள் உங்கள் உறவினர்களிடம் உதவி கேட்கலாமே.

(3) இதில் ஒரு சிரமமும் இல்லை. கண்டிப்பாகச் செய்கிறேன்.

# பேசுதல்

- ஒளிக்காட்சி (1 வினா )
- ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் (2 வினாக்கள்)



வினா 2 – நீ பள்ளியில் பங்கேற்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றிப் பேசு

வினா 3 – பள்ளிகள் மாணவர்களைத் தமிழில் பேச ஊக்குவிக்க எத்தகைய நடவடிக்கைகளை நடத்தலாம் என்று நீ நினைக்கிறாய்? ஏன்?

# வாசித்தல்



பாலன் ஓர் ஏழைச் சிறுவன். ஆனால் அவன் மிகவும் நல்ல பையன். அவன் எல்லாரிடமும் அன்புடன் பழகுவான்; எல்லாருக்கும் தயங்காமல் உதவி செய்வான். ஒரு நாள் அவனுக்குப் பசி எடுத்தபோது, சாப்பிட உணவு எதுவும் இல்லை. தெருவில் போகும் எல்லாரிடமும் கேட்டுப் பார்த்தான். யாரும் அவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. பாலன் சோர்ந்து போய் ஒரு மரத்தின் அடியில் படுத்துக்கொண்டான். பசிமயக்கத்தில் அவன் தூங்கிவிட்டான்.

திடீரென்று ஓர் அலறல் சத்தம் கேட்டு அவன் கண் விழித்தான். ஒரு பெரியவரை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அவர் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்தார். பாலன் சற்றும் தாமதிக்காமல் உடனே அவர் அருகில் சென்று அவருக்கு முதலுதவி அளித்தான். அவன் பாம்பின் நஞ்சை உறிஞ்சித் துப்பினான்.

அந்தப் பெரியவர் ஒரு பணக்காரர். பாலனின் உதவியால் அவர் உயிர் பிழைத்தார். அதனால், அவர் பாலனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவருக்குக் குழந்தை இல்லாததால், அவர் அவனைத் தன் பிள்ளையாக வளர்த்தார்.

# எழுதுதல்

- படக்கட்டுரை



**வினா 1**

# ரயில் நிலையத்தில் நடந்த ஒரு சம்பவம்

மேற்கண்ட தலைப்பில் **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்:

என்ன சம்பவம் நடந்தது?
இந்தச் சம்பவம் எப்போது நடந்தது?
அந்தச் சம்பவம் நடக்க காரணம் என்ன?
அந்தச் சம்பவத்திற்குப் பின் என்ன நிகழ்ந்தது?



# மொழி ( தாள் 2 )
# 90மதிப்பெண்கள்

- வேற்றுமை
- செய்யுள்
- அடைமொழி /எச்சம்
- முன்னுணர்வுக்  கருத்தறிதல்
- தெரிவுவிடைக்  கருத்தறிதல்
- பொருள்
- ஒலி வேறுபாடு
- கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
- சுயவிடைக்  கருத்தறிதல்



## வேற்றுமை

Q1. சுந்தரம் பக்கத்து ஊரிலிருந்த ஒரு மர ஆலை______வேலை கேட்டுச் சென்றார்.

(1) முதலாளியை
(2) முதலாளிக்கு
(3) முதலாளியிடம்
(4) முதலாளியுடன் ( )

Q2. "இந்தக் கனமான மேசையை ________ மட்டுமே எளிதில் தூக்க முடியும்," என்று பாலு ஆணவத்துடன் கூறினான்.

(1) அவனுக்கு
(2) அவனுடைய
(3) அவனால்
(4) அவனோடு ( )

# செய்யுள்

1. சுடினும் செம்பொன் தன்னொளி
_______________________.

1. விடாது
2. படாது
3. இடாது
4. கெடாது

2. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா ________________ அறம்.

1. முயன்றது
2. இயன்றது
3. பயின்றது
4. உயர்ந்தது



# அடைமொழி / எச்சம்

1. குயில் ________________ குரலில் பாடும் தன்மையுடையது.

    (1) இனிமையான
    (2) இனிமையாக
    (3) இனிமையாய்
    (4) இனிமை

2. தாய்ப்பறவை முட்டைகளை _______________ குஞ்சு பொரித்தது.
.
    (1) அடைகாத்த
    (2) அடைகாக்கின்ற
    (3) அடைகாக்கும்
    (4) அடைகாத்து

## முன்னுணர்வுக் கருத்தறிதல்

கணினியை வெகு நேரமாகப் பயன்படுத்திக் கொண்டு இருந்தான் விக்ரம். அப்போது தாத்தா அவனருகே வந்தார். விக்ரம் அமர்ர திரு லீ குவான் யூ அவர்களைப் பற்றி தகவல்களைத் திரட்டிக்கொண்டிருந்தான். சிங்கப்பூரின் பசுமைக்கும் தூய்மைக்கும் அவர் Q16 ______ வித்திட்டார் என்பதற்கான சான்றுகளைத் திரட்டுவதாகக் அவன் கூறினான். அதைக் கேட்டதும் தாத்தா சில விஷயங்களை அவனோடு பகிர்ந்துகொண்டார்.

Q16 (1) வழி
(2) பாதை
(3) எண்ணம்
(4) இடம்

# தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி

முன்னொரு காலத்தில் சீன நாட்டில் தையற்காரர் ஒருவர் இருந்தார்.அவரும் அவரது மனைவியும் எப்பொழுதும் கலகலப்பாக இருப்பர்.அன்றாடம் யாரையாவது தங்கள் வீட்டிற்கு அழைத்து வருவர்.அவர்களுக்கு விருந்து வைத்துக் கேளிக்கையும் கும்மாளமுமாகக் காலத்தைக் கழிப்பர்.இது அவர்களுக்கு வழக்கமாக இருந்தது.அன்றும் அவர்கள் கடைத் தெருவிற்குச் சென்று பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் அவர்களுக்கு எதிரே **விசித்திரமான** தோற்றமுடைய குள்ளன் ஒருவன் வந்தான்.அவன் இரண்டடி உயரமே இருந்தான்.அவனுக்குக் கூன் விழுந்து இருந்தது.அவனைப் பார்த்த தையல்காரர் தன் மனைவியிடம் ‘‘இவனைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கிறது.இவனை இன்று நம் வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்து வைத்தால் என்ன?’’ என்று கேட்டான். ‘‘இவனைப் பார்த்தாலே சிரிப்பு வருகிறது.இவன் நம்முடன் விருந்துக்கு வந்தால் வயிறு புண்ணாகும் வரை சிரித்து மகிழலாம்.இன்றைய நாள் நமக்கு மறக்க முடியாத நாளாக இருக்கும்’’ என்றாள் அவள்.அவர்கள் இருவரும் அவனருகே சென்று ‘‘ எங்கள் வீட்டிற்கு வந்து விருந்து உண்டு விட்டு செல்ல வேண்டும்’’ என்று அழைத்தனர்.

## கேள்விகள்

1) தையற்காரரும் அவரது மனைவியும் எவ்வாறு தம் நேரத்தைக் கழித்தனர் ?

1) தம் வீட்டிற்கு யாரையாவது அழைப்பதன் வழி
2) விருந்தினரைக் கேலி செய்வதன் மூலம்
3) விருந்தினரோடு உல்லாசமாகச் செலவழிப்பதன் மூலம்
4) விருந்தினரை உபசரிப்பதன் வழி

2) குள்ளன் ஏன் விநோதமான தோற்றமுள்ளவனாகக் கருதப்படுகிறான் ?

1) இரண்டடி அகலமும் கூனும் இருந்ததால்
2) குள்ளமாகவும் கூனும் இருந்ததால்
3) கூனும் இரண்டடி உயரமாக இருந்ததால்
4) வேடிக்கையாகவும் கூனும் இருந்ததால்



# சொற்பொருள்

Q1 விசித்திரமான

1. நகைச்சுவையான
2. வேடிக்கையான
3. விநோதமான
4. விகாரமான



# ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

Q1. நம் மனதில் உள்ள தீய எண்ணங்களை ________________ வேண்டும். அப்போது தான் நாம் வெற்றி பாதையை நோக்கி செல்லலாம்.

Q2. _________________ ஊன்றி நடந்த மூதாட்டியின் கைகளில் நிறைய பைகள் இருந்தன.ஆகவே,அவர் நடக்கச் சிரமப்பட்டார்.

Q3. என் பாட்டி _______________ நம்பிக்கை அதிகம் உள்ளவர்.அவர் வாரத்திற்கு மூன்று முறை கோயிலுக்குச் செல்வார்.

1) கலைய
2) கோல்
3) களைய
4) இரை
5) கோள்
6) இறை

# கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றி படி

### *கண்மணி பயண நிறுவனம்*

24 மணி நேரம் இயங்கும்
பொது விடுமுறை அன்று மட்டும் திறக்கப்படாது.
மலிவு விலையில் விமானப் பயணச்சீட்டுகளும் உண்டு.

**பள்ளி விடுமுறையின் போது சிறப்பு சலுகை**
பத்து வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளைக்குப் பெற்றோருடன் இந்தியாவுக்குச் சென்று வர இலவச பயணச்சீட்டு.
தம் பேரப்பிள்ளைகளுக்குப் பயணம் செய்யும் தாத்தா பாட்டிக்கு 25% கழிவு உண்டு.
அறுபது வயதுக்கு மேற்பட்டவருடன் பயணம் செய்வோருக்கு 5 நட்சத்திர விடுதியில் ஒரு நாள் இலவசமாக தங்கும் வாய்ப்பு வழங்கப்படும்.



## கேள்விகள்

1.கண்மணி பயண நிறுவனம் எப்போது தனது வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்கும் ?

1.வாரநாட்களிலும் வார இறுதி நாட்களிலும்
2.காலை முதல் இரவு வரை
3. வாரநாட்களிலும் பொது விடுமுறை அன்றும்
4. பொது விடுமுறையைத் தவிர்த்து மற்ற நாட்களில்

2.மூத்த குடிமக்களுக்கு எத்தகைய சலுகை வழங்கப்படுகிறது ?

1. 5 நட்சத்திர விடுதியில்  இலவசமாக தங்கும் வாய்ப்பு
2. தம் பேரப்பிள்ளைகளுடன் பயணம் செய்யும் வாய்ப்பு
3. குறைந்த கட்டணம் செலுத்தும் வாய்ப்பு
4. 25 வெள்ளி கழிவு வழங்கப்படும் வாய்ப்பு

# சுயவிடைக் கருத்தறிதல்

ஒரு கிராமத்தில் ஓர் ஏழையும் பணக்காரனும் வாழ்ந்து வந்தனர். பணக்காரன் பெரிய மாளிகையில் வசித்து வந்தான். ஆனால், ஏழையோ மாளிகைக்குப் பக்கத்தில் அவனுக்குச் சொந்தமான பசுவுடன் குடிசையில் வசித்து வந்தான். பணக்காரனிடம் ஏராளமான பணம் இருந்தது. தினமும் இரவில் ஆடம்பரமாக உணவு உண்பான். ஏழை தினமும் தன் பசு தரும் பாலை விற்று, அதில் வரும் வருமானத்தில் வெறும் கஞ்சி காய்ச்சியைச் சாப்பிட்டான். தினமும் கஞ்சி சாப்பிட்டுச் சலித்துப் போகாமல் இருக்க, ஏழை ஓர் உத்தியைக் கடைப்பிடித்தான். ஏழை தினமும் இரவு உணவைப் பணக்காரனின் சன்னல் அருகில் அமர்ந்துதான் உண்பான். மாளிகையிலிருந்து வரும் உணவு வாசனையை முகந்து கொண்டு, “ஆஹா! பிரியாணி என்ன மணம்!”, “கோழி வறுவல் என்ன வாசனை!”, “நெய் மணம் கமகமக்கிறதே!” என்று மனதுக்குள் சொல்லியபடியே தன் கஞ்சியைச் சுவைத்து உண்பான்.

ஒரு நாள் பணக்காரன் இரவு விருந்துக்கு முன் தன் வீட்டைச் சுற்றி வந்தபோது தன் சமையலறையின் சன்னலருகே ஏழை அமர்ந்து கஞ்சியைச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தான். ஏழையைப் பார்த்து, “இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று பணக்காரன் கேட்டான், “ஐயா, உங்கள் வீட்டிலிருந்து வரும் வாசனைக்காக இங்கே அமர்ந்திருக்கிறேன்,” என்று ஏழை கூறினான்.

Q36. பணக்காரன், ஏழை ஆகிய இருவரின் வாழ்க்கை எப்படி வேறுபட்டு இருந்தது?

Q37. ஏழை தினமும் கஞ்சி சாப்பிட்டுச் சலித்துப் போகாமல் இருக்க என்ன செய்தான்?

Q40 முத்துவிடம் காணப்படும் உயர்ந்த பண்பை உணர்த்தும் இரண்டு செயல்களைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பருக்குக் குறிப்பு எழுது.

(4 மதிப்பெண்கள்)

அன்புள்ள மணி, ______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

இப்படிக்கு

## பெற்றோரின் கவனத்திற்கு

1. வீட்டுப்பாடம்

2. பெற்றோர் கையொப்பம்

3. தமிழ் கதை நூல்கள்

# நன்றி

# வணக்கம்